1995 மார்ச் 29]

ஆட்சியிலே அந்த மக்கள் கிட்டத்தட்ட 20 ஆண்டுக்காலமாக குடியிருக்கிறார்கள். அவர்கள் ஏற்கனவே அங்கே குடிசைகட்டி குடியிருக்கவில்லை, பெர்மனன்ட் கன்ஸ்ட்ரக்ஷனே அவர்கள் கட்டியிருக்கிறார்கள். அது மட்டுமல்ல. அவர்களுக்குச் சாலையும் போடப்பட்டிருக்கிறது. தெருவிளக்குகள் அமைத்தாகிவிட்டது. இனிமேல் அவற்றை அகற்றுவது என்பது எனக்கு நல்ல உத்தேசமாகத் தோன்றவில்லை. ஆகவே அந்த இடத்திலே அங்கே பட்டா வழங்குவதை கருணையோடு அமைச்சர் மீண்டும் பரிசீலனை செய்வார்களா? விதிமுறையைத் தளர்த்தி, as a special case விதிமுறையைத் தளர்த்தி ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்த தவறுகளை எல்லாம் ஏற்றுக் கொண்டு அதை நடைமுறைப்படுத்தினால் மீண்டும் தவறுகள் வளர்ந்து கொண்டே போகும். ஆகவே தவறு வந்தாலும், அது தேவை என்றாலும் அது தளர்த்தப்படமாட்டாது. ஆனால் குறிப்பிட்ட அந்த இடத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறபடி அதனால் எந்தவிதமான பாதகமும் ஏற்படாது, அதனாலே நிலத்தடி நீர் பாதிக்கப்படாது என்றால், இதை மட்டுமல்ல, இதைப் போன்ற பல இடங்களையும் ஆய்வு செய்வதற்கு இந்த அரசு எண்ணிக்கொண்டிருக்கிறது. அதன் அடிப்படையிலே இதையும் அரசு எண்ணும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 143, டாக்டர். அ. ஸ்ரீதரன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

143—

வால்பாறை மருத்துவமனையில்
அறுவை சிகிச்சை நிபுணர் பணியமர்த்தல்

***11724—டாக்டர் அ. ஸ்ரீதரன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

வால்பாறை மருத்துவமனையில் அறுவை சிகிச்சை நிபுணர் பணியமர்த்தல் செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

[1995 மார்ச் 29

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வால்பாறை மருத்துமனையில் ஒரு பொது அறுவை சிகிச்சை நிபுணர் தற்போது நியமிக்கப்பட்டிருக்கிறார்.

டாக்டர் அ. ஸ்ரீதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறை மருத்துவமனை சற்றேறக்குறைய 32 படுக்கைகள் கொண்ட தாலுக்கா மருத்துவமனை. இது ரெபரல் என்று சொல்லக்கூடிய கோவை மருத்துவக்கல்லூரி மருத்துவமனையிலிருந்து 125 கிலோ மீட்டர் தூரத்தில், முற்றிலும் காடுகள் நிறைந்த பகுதியாக இருக்கிறது. எமர்ஜென்சி பேஷண்ட்டுகளை எடுத்து வருகின்ற நேரத்தில் வழியிலே அவர்கள் இறக்கக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினால், அறுவை சிகிச்சை நிபுணரே அங்கே டெசிசன் மேக்கிங் டாக்டராக இருக்கவேண்டும் என்றும் பொறுப்புள்ள டாக்டராக இருக்கவேண்டும் என்றும், அதே போல பிற கைனகாலஜிஸ்ட், ஆர்த்தோபிடிஷியன் போன்ற டாக்டர்களையும் நியமிப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மருத்துவமனையிலே தற்போது 4 டாக்டர்கள் இருக்கிறார்கள். அதிலேயும் ஒரு பெண் மருத்துவர், டி.ஜி.ஓ. இருக்கிறார். இப்போது ஒரு எம். எஸ். (ஜெனரல் சர்ஜரி) ஒருவர் வந்திருக்கிறார். அரசினுடைய சமீபத்திய முடிவு என்பதே, ஒவ்வொரு தாலுக்கா மருத்துவமனையிலே குறைந்தபட்சம் 3 ஸ்பெஷலிஸ்ட்ஸ் இருக்க வேண்டும் என்று நாங்கள் முடிவு எடுத்து இருக்கிறோம். ஒன்று டி.ஜி.ஓ., இன்னொன்று டி.சி.எச். இன்னொன்று அனஸ்தடிஸ்ட். இந்த மூவரும் கட்டாயமாக இருக்கவேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அரசினுடைய மொத்தமான முடிவு என்னவென்றால் ஒவ்வொரு தாலுக்கா மருத்துவமனையிலும் இருக்கின்ற மருத்துவர்கள் என்னென்ன ஸ்பெஷலிஸ்ட் ஆக இருக்க வேண்டுமென்று வரையறுக்கப்பட வேண்டுமென்று முடிவெடுத்தும் இப்பொது வரைமுறை செய்யப்பட்டிருக்கிறது. இருந்தாலும் அந்த மருத்துவர்களை முழுக்க முழுக்க நியமிக்கவேண்டுமென்றால் காலம் எடுக்கும். இப்போது எம்.பி.பி.எஸ். ஆக இருப்பவர்கள் அங்கேயிருந்து மாற்றப்பட்டு புதிதாக அந்த இடத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டு ஸ்பெஷலிஸ்ட் அமர்த்தப்படவேண்டும். ஆனால் உடனடியாக 3 ஸ்பெஷலிஸ்ட்

1995 மார்ச் 29]

கண்டிப்பாக எல்லா மருத்துவமனைகளிலும் அமர்த்தப்பட வேண்டுமென்று சொல்லி, பெரும்பகுதி, அந்த நடவடிக்கை எடுத்து முடிக்கப்பட்டுவிட்டது. அதேபோல், மற்ற இடங்களைப் பொறுத்தவரை என்ன ஸ்பெஷலிஸ்ட் என்று முடிவு எடுப்பதற்கான கமிட்டி அமைக்கப்பட்டு அதைச் செய்து கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டது (குறுக்கீடு) அந்த எம். எஸ். படித்தவரையே...

முற்பகல் *10-10*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரத்தில் உறுப்பினர்கள் அமைச்சர்கள் பகுதிக்குச் சென்று இடையூறு செய்வது சரியல்ல. அமைச்சர்களும் அதைப்போல அனுமதிக்க வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பொறுப்பான டாக்டராக, இன்சார்ஜ் மெடிக்கல் ஆபீசராக நியமிக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். ஆனால், அதைப் பொறுத்தவரை, ஏற்கெனவே இருக்கின்ற முறை என்னவென்று சொன்னால், இருக்கின்ற மருத்துவர்களுக்குள்ளே அசிஸ்டன்ட் சர்ஜன்தான் பேசிக் குவாலிபிக்கேஷன், எம்.பி.,பி.எஸ். என்று தான் எடுக்கிறோம். அசிஸ்டன்ட் சர்ஜன் தான் அங்கே இருக்கிறார்கள், அதிலே யார் மூத்த மருத்துவரோ, அங்கே இருப்பவர்களுக்குள் யார் சீனியர்மேனோ அவரைத் தான் அந்தப் பொறுப்பிலே அமர்த்த முடியும். அதுதான் தற்போது இருக்கிற முறை. அவர் வேண்டாமென்று சொன்னால்தான் அடுத்தவருக்கு நாம் அந்தப் பொறுப்பை ஒப்படைக்க முடியும். எனவே, அந்த வகையிலே படிப்பை வைத்து அங்கே நாம் பொறுப்பை ஒப்படைப்பதில்லை. ஆனால், எதிர்காலத்திலே தனியாக அதற்கு ஒரு திட்டம் இப்பொழுது வகுக்கப்பட்டிருக்கிறது. வருகிற டிமாண்டிலே நாங்கள் அதை அறிவிக்கலாம் என்று இருக்கிறோம். எதிர்காலத்திலே ஒவ்வொரு தாலுக்கா மருத்துவமனைக்கும் தனியாக நிர்வாக மருத்துவர் என்று ஒருவரை நியமிக்கலாம் என்ற ஆலோசனை இருக்கிறது. எனவே, தற்போது அங்கே, இருக்கின்ற மருத்துவரை நியமிக்கலாம். சர்ஜனைப் பொறுத்தவரை அவர் தன்னுடைய கேஸை ரெஃபர் செய்கிறபொழுது அதற்கு எந்தத் தடையும் அந்த இன்சார்ஜ் மெடிக்கல் ஆபீசா சொல்ல முடியாது. இந்த ஸ்பெஷலிஸ்ட், அவர் பார்க்கிற நோயாளிகளை ரெஃபர் செய்வதற்கு எந்தத் தடையும் இருக்க முடியாது.

[*1995 மார்ச் 29*

டாக்டர் அ. ஸ்ரீதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சருடைய விளக்கத்திற்கு நன்றி. ஆனால் வால்பாறை போன்ற மலைப்பகுதிகளுக்கு நீங்கள் ஒரு ஸ்பெஷல் கன்சிடரேஷன் செய்ய வேண்டும். அங்கே இருக்கக்கூடிய மலையிலிருந்து கீழே கொண்டு வருவதற்குள், பேஷன்ட்ஸ் அந்த ஹெயர்பின் பென்டில் வருகின்றபொழுது பொதுவாக ஹெட் இன்ஜூரி என்று வைத்துக்கொள்வோமானால் கீழே வருவதற்குள்ளாகவே அவர்களைக் காப்பாற்ற முடியாத அளவுக்கு ஆபத்தான நிலைக்குச் செல்கின்ற காரணத்தினாலே அரசாங்கம் இதில் ஒரு ஸ்பெஷல் கன்சிடரேஷன் செய்து அங்கு இருக்கக்கூடிய ஆர்த்தோபிடீசியனையோ அல்லது போஸ்ட் கிராஜூவேட் சர்ஜனையோ நீங்கள் பொறுப்பு மருத்துவராக அமர்த்தினால் தான் ஸ்பாட் டெசிஷன் எடுத்து, உடனடியாக அந்த ரெஃபரல் ஆஸ்பிட்டலுக்கு ரெஃபர் செய்வதற்கு, தாமதம் இல்லாமல் செய்வதற்கு ஒரு வழிவகை செய்ய முடியும். எனவே, இதை இந்த மலைப் பகுதிகள் போன்ற பகுதிகளுக்கு அமைச்சர் அவர்கள் தளர்த்தி உடனடியாக நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே நடைமுறைச் சிக்கல் இருக்கும். காரணம், போஸ்ட் கிராஜூவேட் முடித்துவிட்டு வருகிற மருத்துவர் ஓராண்டு மட்டுமே அரசு அனுபவம் உள்ளவராக அல்லது அரசு சர்வீஸ் உள்ளவராக இருக்கலாம். *10* ஆண்டுக்காலம், *15* ஆண்டுக்காலம் சர்வீஸ் போட்டவர் அங்கே எம்.பி.பி.எஸ். டாக்டராக இருக்கலாம். நான் ஏற்கெனவே சொன்னபடி, அவருக்கு என்ன குவாலிபிக்கேஷன் இருந்தாலும்சரி, மெடிக்கல் ஆபீசர் இன்சார்ஜ் அவர்களிடம் மட்டும் தான் இவர்கள் ரெஃபர் செய்ய வேண்டுமென்ற அவசியம் இல்லை. ஒரு ஸ்பெசலிஸ்ட் ஒரு கேசைப் பார்த்தால் அவர் ரெஃபர் செய்தாலே மெடிக்கல் ஆபீசர் இன்சார்ஜ் வந்து அதைத் தடுக்கப் போவதில்லை. எனவே, யார் எந்தெந்த கேஸ்களைப் பார்க்கிறார்களோ, எந்தெந்த நோயாளிகளைப் பார்க்கிறார்களோ அந்தந்த நோயாளிகளை அந்த மருத்துவரே ரெஃபர் செய்யலாம். அதற்கு எந்தத் தடையும் இருக்க முடியாது. இந்த நிர்வாக மருத்துவர் என்பது ஓவர் ஆல் நிர்வாகத்தைப் பார்ப்பதற்கே ஒழிய ஒரு நோயாளியை அனுப்புவதா வேண்டாமா என்று முடிவு எடுப்பதற்காக அல்ல. எனவே, அந்த நிர்வாகம் வேறு, நோயாளிகளை ரெஃபர் செய்து அனுப்புவது வேறு. எனவே, அதில் எந்தத் தடையும் இருக்க முடியாது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூட அந்த மருத்துவர்களுக்கு இந்தத் தெளிவை தெளிவுபடுத்தி அதன்படி அவர்கள் நடக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளலாம்.